முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை

முன்னிலை திருமதி பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,

முதன்மை சார்பு நீதிபதி

ம.சா. 1 நாள்.04.08.2023

| MCOP No. | 73/2020 | | |
|---|---|---|---|
| பெயர் | சரண் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணையின் தொடர்ச்சி

நான் ஏற்கனவே ம சா ஆ 1 முதல் ம சா ஆ 12, நீ ம சா ஆ 1 ஆவணங்கள் தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளேன். எனது தரப்பில் மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய சாட்சியம் அளிக்கிறேன். மேலும் எனது தரப்பு ஆவணங்களாக அரசு பெரியார் மருத்துவ மனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு மற்றும் மருத்துவ விடுவிப்பு குறிப்பு ம சா ஆ 13. கிருஷ்ணா மருத்துவ மனையில் வழங்கப்பட்ட மருத்துவ விடுப்பு சான்று ம சா ஆ 14. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

மயிலாடுதுறை அரசு மருத்துவ மனையில் என்ன காரணத்திற்காக வெளியேறிவிட்டேன் என்றால் அவர்கள் பார்க்க முடியாது என்று சொன்னதால் வெளியேறிவிட்டேன். எனது வேண்டு கோலின் படி தான் என்னை விடுப்பு செய்துவிட்டார்கள் என்று ம சா ஆ 13ல் சொல்லப்பட்டுள்ளது என்றால் அவசர சிகிச்சையாக பார்க்க முடியாது என்று சொன்னதால் நான் வெளியேறிவிட்டேன். நான் கிருஷ்ணா மருத்துவ மனையில் இருந்த போது என்ன சிகிச்சை கொடுத்தார்கள் என்றால் கையில் அறுவை சிகிச்சை செய்தார்கள். 2020ல் அங்கு மீண்டும் சென்ற போது என்ன சிகிச்சை கொடுத்தார்கள் என்றால் கையில் வைக்கப்பட்டுள்ள பிலேட்டை அகற்ற வேண்டும் என்று அறுவை சிகிச்சை செய்தார்கள். அவர்கள் எனது கை முட்டியில் இருந்த பிலேட்டையும் அகற்றிவிட்டார்கள். ஆனால் முன்கையில் உள்ள பிலேட்டை தற்போதும் உள்ளது. மேற்படி சிகிச்சைகள் மயிலாடுதுறை அரசு மருத்துவ மனையில் உள்ளது என்றால் அவர்கள் அப்போது இல்லை என்று சொல்லிவிட்டார்கள். ம சா ஆ 14ல் நான் வெளியே செல்ல விருப்பப்படுவதாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். பிலேட்டை எடுத்தற்கு காரணம் என்னுடைய அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு தான் என்றும், நான் சரியாக சிகிச்சை எடுத்து கொள்ளாதது என்றாலும்

சரியல்ல, சரியாக சிகிச்சை எடுத்தால் தான் கை வந்தது. நான் கையை நீண்ட உயரம் வரை உயர்த்த முடியவில்லை. நான் சிகிச்சை எடுத்தது கை முட்டில் இருந்து கை மணிகட்டு வரையில் தான் என்றால் சரிதான். நான் கூறுவது போல் கழுத்து, முதுகு ஆகிய பகுதிகளில் வலியுள்ளது என்று நான் சொல்வதற்கு சம்பந்தம் இல்லை என்றால் கையை கட்டி வைத்திருந்த போது கழுத்திற்கும், முதிகிற்கும் அதன் பேலன்ஸ் காரணமாக வலி ஏற்படுவது தொடர்ந்தது. என்னால் எனது கையெழுத்து போட முடியுமா என்றால் முடியும். எனக்கு 60 சதவீதம் அதிகமாக ஊன சான்று கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட ஊனம் தற்கலிகமானது என்றால் எனக்கு தெரியாது.

<u>4ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கு சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். அதில் நான் பயணித்த பேருந்தின் மீதும், டிரக் மீதும் தவறு சொல்லியுள்ளேன். பேருந்தின் நடத்துனர் மற்றும் ஓட்டுநர் என்னை எச்சரிக்கை செய்யாதது தான் அவர்கள் மீது தவறு என்று சொல்லியுள்ளேன். எதிரே வந்த டாடா ஏஸ் வாகனத்தின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதைதான் விபத்திற்கு காரணம் என்று சொல்லியுள்ளேன். டாடா ஏஸ் தான் வலது பக்கமாக வந்து பேருந்தில் அருகில் வந்து என் மீது மோதிவிட்டது என்று சொல்லியுள்ளேன். டாடா எஸ் வாகனத்தின் ஓட்டுநர் சரியாக ஓட்டியிருந்தால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரிதான். அனைத்து பேருந்துகளிலும் கரம், சிரம் வெளியே நீட்டாதீர்கள் என்று தகவல் பலகையுள்ளது என்றால் சரிதான். கையை வெளியே நீட்டுவதால் அடிப்படும் என்பது எனக்கு தெரியும். நான் கையை வெளியே நீட்டாமல் இருந்திருந்தால் இந்த காயம் ஏற்பட்டிருக்காது என்றால் நான் கையை வெளியே நீட்டவில்லை. என்னை தவிர வேறு யாருக்கும் அந்த பேருந்தில் அப்போது அடிப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. நான் மயங்கிவிட்டேன். இந்த விபத்திற்கு எனது அஜாக்கிரதையும் 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவும் தான் என்றால் சரியல்ல. ம சா ஆ 2ல் எனது வலது கையை பேருந்தின் ஜன்னலுக்கு வெளியே நீட்டி இருந்த போது சொல்லியுள்ளேன் என்றால் நான் ஜன்னல் பக்கத்தில் கை வைக்கவில்லை. பேருந்தின் ஓட்டுநர் மற்றும் நடத்துனர் மீது எந்த அஜாக்கிரதையும் இல்லை என்பதால் 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் எந்த இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. (இதர ஆட்சேபனைகள் குறித்து 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற் கொள்ளப்பட்ட குறுக்கு விசாரணையை 4ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் ஏற்றுக் கொள்கிறார்கள்).